இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 01-08-2025

# ஒன்றிய அரசு எதிர்க்க வேண்டும்!

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 25 விழுக்காடு வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் அநியாய அறிவிப்பைச் செய்துள்ளார். இதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு கடுமையாக எதிர்த்தாக வேண்டும்.

ஆகஸ்ட் 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்ற அறிவிப்புடன் அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ள செய்தி, இந்தியாவுக்கு மிகமிக மோசமானது ஆகும்.

“எல்லாம் நல்லதல்ல! எனவே, ஆகஸ்ட் 1 ஆம் தேதி முதல் இந்தியா 25 விழுக்காடு வரியையும் அபராதத்தையும் செலுத்தும். இந்தியா, அமெரிக்காவின் நண்பனாக இருந்த போதிலும், கடந்த ஆண்டுகளில் சிறிய அளவிலான வர்த்தகமே இந்தியாவுடன் செய்து வருகிறோம். ஏனெனில் அவர்கள் மிக அதிக அளவு வரி விதிக்கின்றனர். உலகில் மிக அதிக வரிகளில் இதுவும் ஒன்றாக உள்ளது. உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு மிகக் கடுமையான, அருவருப்பான, நாணயமற்ற வர்த்தகத் தடைகளை அவை கொண்டுள்ளன.

உக்ரைனில் ரஷ்யா செய்து வரும் கொலைகளை நிறுத்த வேண்டும் என அனைத்துத் தரப்பினரும் விரும்பும் வேளையில், அந்த நாட்டிடம் இருந்து இந்தியா எப்போதும் குறிப்பிடத்தக்க அளவுக்கு ராணுவத் தளவாடங்கள், எரி சக்திப் பொருட்களை இறக்குமதி செய்து வருகிறது” - இப்படிப் போகிறது அமெரிக்க அதிபரின் செய்திக் குறிப்பு. இவை எதேச்சதிகாரக் கருத்துக்கள் ஆகும்.

கடந்த ஏப்ரல் மாதமே இது போன்ற ஒரு அறிவிப்பை அமெரிக்க அதிபர் டிரம்ப் செய்தார். “அமெரிக்கா மீது வரிகளையும் பிற தடைகளையும் விதித்துள்ள ‘மோசமான நாடுகளில்’ ஒன்றாக இந்தியாவைப் பட்டியலிட்டது டிரம்ப் அரசு. இதன் காரணமாக இந்தியா மீது 27 விழுக்காடு வரி விதிக்கப்பட்டது. அதுவரை 2 விழுக்காடு வரி மட்டுமே விதிக்கப்பட்டு வந்த நிலையில், இந்தியா மீது 27 விழுக்காடு வரி போடப்படும் என அறிவிக்கப்பட்டது. அமெரிக்கச் சரக்குகளுக்கு இந்தியா 52 விழுக்காடு வரி விதிப்பதாக, அமெரிக்க அதிபர் டிரம்ப் குறிப்பிட்டார். இந்தியா மிகவும் கடினமான அணுகுமுறையைக் கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வர்த்தகக் கொள்கைகளைப் பொறுத்தவரை, ‘இந்தியா மிகவும் கடினமாக நடந்துகொள்வதாகவும்’ அப்போது டிரம்ப் தெரிவித்தார். இந்தியச் சந்தையில் அமெரிக்க இறக்குமதிகள் போட்டியிடுவதை இந்தியாவின் வர்த்தகக் கொள்கைகள் மிகவும் கடினமாக்குகிறது என்று குறிப்பிட்ட அவர், “இந்தியா மிக மிகக் கடுமையாக நடந்து கொள்கிறது. பிரதமர் மோடி சமீபத்தில் இங்கு வந்து சென்றிருந்தார். அவர் எனக்கு சிறந்த நண்பர். நான் அவரிடம், ‘நீங்கள் என் நண்பர்தான். ஆனால், நீங்கள் எங்களை சரியாக நடத்தவில்லை’ என்று சொன்னேன். அவர்கள் 52 விழுக்காடு இறக்குமதி வரி விதிக்கிறார்கள். நாம் பல ஆண்டுகளாக அவர்களுக்கு இறக்குமதி வரி விதிக்கவில்லை” என்று அப்போது டிரம்ப் சொன்னார்.

‘இன்றுதான் அமெரிக்காவுக்கு உண்மையான விடுதலை நாள்’ என்றும் டிரம்ப் அறிவித்தார். இந்த அனைத்து வரியும் வரும் ஏப்ரல் 9 ஆம் தேதி 12.01 மணி முதல் அமலுக்கு வருவதாக வெள்ளை மாளிகை அறிவித்தது. இந்த வரி விதிப்புக்கு உலகத் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அப்போதும் ஒன்றிய பா.ஜ.க அரசு மென்மையான போக்கை கடைப்பிடித்தது. “இந்த சமீபத்திய நிகழ்வுகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது, இதனால் பாதிக்கப்படும் அனைத்துத் தரப்பினரிடமும் ஆலோசனை நடைபெற்று வருகிறது” என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சொன்னார்.

சீனா கடுமையான எதிர்ப்பைக் காட்டியது. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி ஆகும் பொருட்களுக்கு சீனா அதிக வரி விதிப்பதன் மூலமாக தனது எதிர்ப்பைக் காட்டியது. ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன், ஜெர்மனி, ஸ்வீடன் ஆகிய நாடுகளும் அப்போது கடுமையாக எதிர்த்தன. இந்த நிலையில் சில நாடுகளுக்கான வரி விதிப்பை நிறுத்தி வைத்தார் டிரம்ப். அதில் இந்தியாவும் ஒன்று.

**இதைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தொடங்கின. இதுவரை ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வாஷிங்டனில் நடந்துள்ளன. ஆறாவது சுற்று பேச்சுவார்த்தை ஆகஸ்ட் 26 ஆம் தேதி டெல்லியில் நடக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டு இருக்கும் போது, அடுத்தக் கட்டப் பேச்சுக்கு தேதி குறிக்கப்பட்ட நிலையில் தன்னிச்சையாக வரியை உயர்த்தி எதற்காக டிரம்ப் அறிவிக்க வேண்டும்? என்ன அவசரம்? என்று கேட்பதை விட, ஒன்றிய பா.ஜ.க. அரசு மீது அவருக்கு எந்த மரியாதையும் இல்லை என்பதையே இது காட்டுகிறது.**

**“இந்தியா - பாகிஸ்தான் போரை நான்தான் நிறுத்தினேன்” என்று திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார் டிரம்ப். அது தொடர்பாக இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் கேள்விகளால் துளைத்தார்கள். ஆனாலும் பிரதமர் மோடி இதற்குப் பதிலே சொல்லவில்லை. இது அவரது பலவீனத்தின் அடையாளம் ஆகும்.**

**அமெரிக்காவுக்கு எதிரான விமர்சனங்களுக்கு எதிர்வினையாக இந்த வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை பா.ஜ.க. அரசு விளக்க வேண்டும். அமெரிக்காவின் வரி விதிப்பு மிரட்டல்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு கடுமையாக எதிர்க்க வேண்டும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (31.7.2025) முகாம் அலுவலகத்தில், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் சந்தித்து, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருமதி. துர்கா ஸ்டாலின், தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே.சுதீஷ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பி. பார்த்தசாரதி மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.

### சத்தீஸ்கர் மாநிலத்தில், கேரள கன்னியாஸ்திரிகள் கைது:

## திருவனந்தபுரத்தில் கிறிஸ்தவ அமைப்புகள் சார்பில் பேரணி!

திருவனந்தபுரம், ஆக. 1-

பா.ஜ.க. ஆளும் சத்தீஸ்கர் மாநிலத்தில், கட்டாய மதமாற்றம் செய்ய முயற்சி செய்ததாக கேரளாவைச் சேர்ந்த கன்னியாஸ்திரீகள் மேரி மற்றும் வந்தனா பிரான்சிஸ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. சத்தீஸ்கர் பா.ஜ.க. அரசின் இந்த நடவடிக்கைக்கு காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. மேலும் இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில், கத்தோலிக்க திருச்சபை சார்பில் ஆளுநர் மாளிகையை நோக்கி பிரமாண்ட பேரணி நடைபெற்றது. கேரள பிஷப் கவுன்சில் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணி, திருவனந்தபுரம் தியாகிகள் நினைவிடத்தில் இருந்து புறப்பட்டு ஆளுநர் மாளிகையை அடைந்தது.

பின்னர், ஆளுநர் மாளிகை முன்பு, வாயில் கருப்புத் துணியை கட்டியபடி, கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், கத்தோலிக்க திருச்சபை யைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



தனது பிறந்தநாளை முன்னிட்டு வனம் மற்றும் கதர்கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### காவல்துறையில் பல பிரிவுகளுக்குப் புதிய கட்டடங்கள் திறப்பு!

# ரூ.229.20 கோடி மதிப்பில் - மதுரை மத்திய சிறைச்சாலைக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஆக.1-**

**காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் ரூ.45.47 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்து, ரூ.229.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மதுரை மத்திய சிறைச்சாலை கட்டடங்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 27 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 13.54 கோடி ரூபாய் செலவிலும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் 60 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் ஆகியவற்றை திறந்து வைத்து, 229.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மதுரை மத்திய சிறைச்சாலை கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றிவரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டுதல், ”உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள், பாதுகாப்பு பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், காவல்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை காவல்துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திடும் வகையில் 510.03 கோடி ரூபாய் செலவில் 3051 காவலர் குடியிருப்புகள், 59.75 கோடி ரூபாய் செலவில் 51 காவல் நிலையக் கட்டடங்கள், 122.40 கோடி ரூபாய் செலவில் 18 காவல்துறை கட்டடங்கள் மற்றும் ”உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ் 55.19 கோடி ரூபாய் மதிப்பிலான 253 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**காவல்துறை சார்பில் திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரங்கள்!**

கடலூரில் 1 கோடியே 86 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒரு காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, தஞ்சாவூர் மாவட்டம் – திருவிடை மருதூரில் 6 கோடியே 2 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 24 காவலர் குடியிருப்புகள்;

சென்னை மாவட்டம் – தேனாம்பேட்டை மற்றும் மண்ணடியில் 7 கோடியே 22 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 காவல் நிலையக் கட்டடங்கள் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் – பெரும்பாக்கத்தில் 1 கோடியே 85 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம்;

சென்னை மாவட்டம் – கீழ்ப்பாக்கத்தில் 3 கோடியே 30 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் துணை ஆணையாளர் அலுவலகம், வேலூர் மாவட்டம் – சேவூரில் 4 கோடியே 77 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் 15ஆம் அணி தளவாய் நிர்வாக அலுவலகம், திருச்சிராப்பள்ளி மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் 2 கோடியே 53 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அலுவலகங்கள்;

**என மொத்தம் 27 கோடியே 58 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 25 காவலர் குடியிருப்புகள், 3 காவல் நிலையங்கள் மற்றும் 4 காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை!**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, தீயிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்றவைகளிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் கட்டித் தருதல், பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தருதல், பல்வேறு நவீன கருவிகள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளை வழங்குதல் போன்ற பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திடும் வகையில் 45.75 கோடி ரூபாய் செலவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 249 குடியிருப்புகள், 64.79 கோடி ரூபாய் செலவில் 34 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள், 2.45 கோடி ரூபாய் செலவில் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக் கட்டடங்கள், என மொத்தம் ரூ.112.99 கோடி செலவிலான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரங்கள்**

சென்னை மாவட்டம் – வேப்பேரியில் 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 தீயணைப்பு நிலைய அலுவலர் குடியிருப்புகள்; சென்னை மாவட்டம் – வண்ணையம்பதி, தேனாம்பேட்டை மற்றும் வேப்பேரி ஆகிய இடங்களில் 12 கோடியே 79 இலட்சத்து 56 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 3 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள்;

**என மொத்தம் 13 கோடியே 53 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை!**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையானது, நீதிமன்றங்கள் குற்றவாளிகளுக்கு வழங்கும் தண்டனைகளை நிறைவேற்றுவது மட்டுமின்றி, அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான கல்வி மற்றும் தொழில் திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. சிறைகள் மற்றும் சிறைவாசிகளின் பாதுகாப்பினை மேம்படுத்துதல், சிறைவாசிகளின் நலன் மற்றும் சிறைவாசிகளை பொறுப்புள்ள நபர்களாக மாற்றி சமுதாயத்தில் மீண்டும் இணைத்தல் ஆகிய மூன்றும் இத்துறையின் முக்கிய நோக்கங்களாகும்.

சிறைப் பணியாளர்கள் மற்றும் சிறைவாசிகளுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதற்காக உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காகவும் நவீனமயமாக்குவதற்காகவும் இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திடும் வகையில் 9.71 கோடி ரூபாய் செலவில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை பணியாளர்களுக்கான 51 குடியிருப்புகள், 28.58 கோடி ரூபாய் செலவில் 17 சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை கட்டடங்கள், என மொத்தம் 38.29 கோடி ரூபாய் செலவிலான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரங்கள்**

திருநெல்வேலி மாவட்டம் – பாளையங்கோட்டை சிறை வளாகத்தில் 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 சிறை அலுவலர் குடியிருப்புகள்;

**தடய அறிவியல் துறை சார்பில் நிறுவப்பட்டுள்ள போதை மருந்து ஆய்வுப் பிரிவுகளின் விவரங்கள்**

2023 – 2024 ஆம் ஆண்டிற்கான காவல் துறை மானியக் கோரிக்கையில், கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் புதியதாக போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு புலனாய்வாளர்களுக்கு போதைப் பொருட்களை ஆய்வு மேற்கொண்டு அதன் வகையை கண்டறியவும், அது தொடர்பான தடயவியல் ஆய்வறிக்கைகளை விரைந்து வழங்கிடவும் கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் புதியதாக 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள போதை மருந்து ஆய்வுப் பிரிவுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை மற்றும் தடய அறிவியல் துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 45 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**மதுரை மத்திய சிறைச்சாலை கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுதல்**

மதுரை மத்திய சிறைச்சாலையில் இடநெருக்கடி காரணமாக மதுரை புறநகர் பகுதியான செம்பூர் பகுதிக்கு மாற்றியமைக்கும் வகையில் முதற்கட்டமாக 229 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள மத்திய சிறை, 113 சிறைக் காவலர் குடியிருப்புகள், கான்கிரீட் சாலை மற்றும் மதில் சுவர் ஆகியவற்றிற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. சீமா அகர்வால், காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) வினீத் தேவ் வான்கடே, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், தடய அறிவியல் துறை இயக்குநர் முனைவர் சிவப்பிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.